**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No. 207/2016**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

*****

IN THE COURT OF : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU.

Deposition of witness for : LW-9/PW-6

Name : மருத்துவர் இளஞ்செழியன்

Father/Husband's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18.07.2024.

**முதல் விசாரணை–**

நான் தற்போது உதவி நிலை மருத்துவராக செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் பணிபுரிகிறேன். கடந்த 03.04.2016 அன்று செங்கல்பட்டு அரசு மருத்துவமனை அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவர் முகமது இர்பான் ஆசான் என்பவர் பதிவு செய்த விபத்து பதிவேடு எண் 5900317 பூமிநாதன் என்பவருக்கு பதிவு செய்யப்பட்டிருந்தது. மேற்படி நபருக்கு மருத்துவர் கோபிநாத் மற்றும் பல் மருத்துவரால் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. அதன்பிறகு,மேற்படி நபருக்கு இரு முன்கைகளிலும் கொடுவலி காணப்பட்டது. அவருக்கு எக்ஸ்ரே எடுக்கப்பட்டு அவரது இரு முழங்கைகளிலும் ULNAR எலும்பு முறிவு ஏற்பட்டது. இதற்கான அறுவைசிகிச்சை 11.04.2016 அன்று எனது தலைமையிலான குழு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. பிறகு 19.04.2016 பிற்பகல் 2 மணிக்கு மேற்படி நபர் மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயம் எலும்பு முறிவு என்பதனால் அந்த காயம் கொடுங்காயம் என்று சான்றளித்தேன். பட்டியல் சாட்சி 7 மருத்துவர் முகமது இர்பான்

ஆசான் என்பவர் பதிவு செய்த **விபத்து பதிவேடானது அ.த.சா. 3 ஆக குறியீடு** செய்யப்படுகிறது(எதிரி தரப்பு வழக்கறிஞர் இந்த ஆவணமானது இந்த சாட்சியால் பதிவு செய்யப்படவில்லை என்பதனால் ஆட்சேபனை தெரிவித்தார்). மேற்படி நான் அளித்த **காயச்சான்றானது அ.த.சா. 4 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

பூமிநாதன் என்பவருக்கு நான் சிகிச்சை எதுவும் மேற்கொள்ளவில்லை. அவருக்கு நான் காயச்சான்று மட்டும் அளித்தேன். பொதுவாக ஒரு நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்தான் அவருக்கு நடந்தது என்ன என்பதை குறித்து கருத்து தெரிவிக்க முடியும் என்றால் சரிதான். இந்த வழக்கின் விசாரணை அதிகாரி என்னிடம் விசாரணையின்போது Questionaire விதத்தில் வழக்கு சம்பந்தமாக கருத்துரை எதுவும் கேட்டு வாங்கப்படவில்லை என்றால் சரிதான். நான் மேற்படி பூமிநாதன் என்பவருக்கு அறுவை சிகிச்சை செய்ததற்கான நிரூபிப்பு ஆவணம் எதுவும் வழக்கு விசாரணை அதிகாரி என்னிடமிருந்து பெறப்படவில்லை என்றால் சரிதான். பொதுவாக எலும்பு சத்து குறைவு உள்ளவர்கள் மற்றும் ரெமாட்டா ஆர்தரைட்டிஸ் உள்ள நபர்கள் சாதாரணமாக கீழே விழுந்தால் மேற்சொன்ன அடி ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் உண்டு.

sd/-xx

Typewritten to my dictation in open
court read over to the witness in Tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

Sd/-R.D. Aarthi,
Judicial Magistrate No.II,
Chengalpattu.